ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2441/ 57 - 2025 ජූනි මස 21 වැනි සෙනසුරාදා - 2025.06.21
2441/57 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.-பீ. 94/47 (viii) B

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

6(2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2) (ஆ) என்னும் பிரிவாலும் மற்றும் 21(2) (ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரான அநுர கருணாதிலக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் -

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ‘‘அத்கந்த புராண ரஜமஹா விஹாரை” என அழைக்கப்படும் காணி இடப்பரப்பானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலே வெளிப்படுத்தப்பட்டதான “அத்கந்த புராண ரஜமஹா விஹாரை” பௌதிக உருவரை வரைபட திட்டமொன்று தயாரிக்கப்பட முதல் வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**அநுர கருணாதிலக்க,**
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு
மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2025, யூன் 06.



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**புராண அத்கந்த ரஜமஹா விஹாரை புனித பிரதேச இடப்பரப்பினைக் கொண்ட பிரதேசம்**

தென் மாகாணத்தில், மாத்தறை நிருவாக மாவட்டத்திலுள்ள, வெலிகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, இலக்கம் 408, கம்புருகமுவ வடக்கு கிராம அலுவலர் பிரிவினுள், கம்புருகமுவ வடக்கு கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் தலைமையதிபதியின் 2024 திசெம்பர் மாதம் 10 ஆந் திகதியைக் கொண்ட சுவடுத்திட்ட இல. MR/WLG/2024/193 என்பதில் குறித்துக் காட்டப்பட்டுள்ளவாறாக கலகொடவத்த என்னும் காணியின் காணித்துண்டு இல. ஏ (ஹெக்டெயார் 1.1770) எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ளவாறான பரப்பளவில் ஹெக்டயார் 1.1770 விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுமான அக்காணியின் இடப்பரப்பு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு ; -

**துண்டு ‘‘ஏ” - கலகொடவத்த**

| | | |
|---|---|---|
| வடக்கே | - | பத்திரம் 1 இன் துண்டு இல. 2, 4 மற்றும் வீதி (பிரதேச சபை); |
| கிழக்கே | - | வீதி (பிரதேச சபை) மற்றும் பத்திரத்தின் மற்றும் துண்டு இல. 43; |
| தெற்கே | - | பத்திர இல. 1 இன் துண்டு இல. 43, 42, 41, 40 மற்றும் 35; |
| மேற்கே | - | பத்திர இல. 1 துண்டு இல. 35, 6 மற்றும் 2. |

EOG 06-0194